بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *01/08/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

- **2025 ஆம் ஆண்டின் பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் இறங்கிய இறை அருள்கள்**
- **புதிதாக பைஅத் செய்தவர்கள் மற்றும் ஜமாஅத் அல்லாத விருந்தினர்களின் தாக்கங்கள் பற்றிய குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

கடந்த ஞாயிற்றுக்கிழமை, அல்லாஹ்வின் அருளால் யூ.கே ஆண்டு மாநாடு தனது நிறைவை எட்டியது. இந்த மூன்று நாட்களும் பெரும் அருள்கள் நிறைந்தவையாகவும், அல்லாஹ்வின் அருள்களைக் காட்டும் நாட்களாகவும் இருந்தன. அல்லாஹ் நம் மீது பெரும் கருணை காட்டியுள்ளான்; அவன் இந்த மூன்று நாட்களில் தனது எண்ணற்ற அருள்களை நம்மீது பொழிந்தான்; மாநாட்டை எல்லா வகையிலும் அருள் நிறைந்ததாக ஆக்கினான்; மாநாடு நல்லபடியாகவும், சிறப்பானதாகவும் முடிவடைந்தது. அல்லாஹ்வின் அருளால் வானிலையும் நன்றாக இருந்தது. அனைத்து நிகழ்ச்சிகளும் மிகவும் சுமூகமாக நிறைவடைந்தன.

மாநாட்டின் அடிப்படை நிகழ்ச்சிகளான சொற்பொழிவுகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளைத் தவிர, தப்லீக் மற்றும் அறிவுசார்ந்த நோக்கங்களுக்காக பல்வேறு துறைகள் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சிகளும் அல்லாஹ்வின் அருளால் அந்நியர்கள் மீது மிகவும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தின; பல அஹ்மதிகளுக்கும் தங்கள் அறிவை மேலும் பெருக்கிக்கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

இதேபோல், MTA-வும் மாநாட்டு நிகழ்ச்சிகளின் இடைவேளைகளில் பல்வேறு அறிவுசார்ந்த நிகழ்ச்சிகளைக் காட்டி தகவல்களை வழங்கியது. இது மக்கள் மீது மிகவும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. மற்ற நாடுகளில் இருக்கும் அஹ்மதிகளும், தமக்கும் பல புதிய விஷயங்கள் தெரிய வந்தன என்று கூறி இதை மிகவும் விரும்பினர். அதேபோல், இந்த முறை MTA உலகின் சுமார் 56 நாடுகளில் உள்ள 119 மையங்களுடன் மாநாட்டை இணைத்தது. இந்த இணைப்பின் மூலமாக, அவர்கள் தங்களை அங்கேயே (அதாவது, மாநாட்டுத் திடலில்) இருப்பதாக உணரும் வகையில் அல்லாஹ் அவர்களுக்கு மாநாட்டைக் கேட்கும் நல்வாய்ப்பை வழங்கினான். இந்த புதிய கண்டுபிடிப்புகள் மூலம் உலகெங்கிலும் உள்ள அஹ்மதிகளை அல்லாஹ் ஒன்றிணைத்துள்ளான். எனவே, இதுவும் அல்லாஹ்வின் அருள்களில் ஒரு மிகப்பெரிய அருளாகும். இதை அவன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது பொழிந்துள்ளான்; ஒரே சமுதாயமாக மாறும் இந்தக் காட்சி உலகில் வேறு எங்கும் காணக்கிடைக்காது.

இந்த முறை பொதுவாக ஏற்பாடுகள் கடந்த ஆண்டுகளை விட மிகவும் சிறப்பாக இருந்ததாக பெரும்பாலான மக்கள் கூறியுள்ளனர்; பலர் இதை வெளிப்படுத்தியுள்ளனர். இங்கு கலந்துகொண்டவர்களும், தொலைக்காட்சியில் பல்வேறு நாடுகளில் நிகழ்ச்சிகளைப்

பார்த்தவர்களும் இதைக் கூறியுள்ளனர். ஒரு சிறப்பான சூழல் நிலவியது. மாநாட்டில் அல்லாஹ்வின் சிறப்பான அருள்கள் இறங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை ஒவ்வொருவரும் அசாதாரணமாக உணர்ந்தார்கள். இவை அனைத்தும் அல்லாஹ்வின் ஒரு சிறப்பான அருளாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் அடியார்களாக மாறுங்கள். நீங்கள் நன்றி செலுத்தினால் நான் என் அருள்களை உங்களுக்கு இன்னும் அதிகமாக வழங்குவேன்; அதிக அருள்களை உங்கள் மீது பொழிவேன்.

எனவே, அல்லாஹ்வின் அருள்களுக்கு மேலும் வாரிசாக ஆக நன்றி செலுத்துவது அவசியம். அல்லாஹ் தன்னைப் பற்றி கூறும்போது, நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மதிக்கக்கூடியவனும் நன்கறிந்தவனும் ஆவான் என்று கூறியுள்ளான். அல்லாஹ்வுக்காக நன்றி என்ற சொல் பயன்படுத்தப்படும்போது அது மதித்தல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. நன்றி செலுத்துபவர்களை அல்லாஹ் மதிக்கின்றான். பிறகு, இந்த மதித்தலின் விளைவாக அல்லாஹ் அவர்களுக்கு மேலும் வழங்கிக் கொண்டே செல்கின்றான். இது வெறும் வார்த்தைகளாக மட்டும் இருக்காமல் நன்றி செலுத்தும் ஓர் உணர்வு இருக்க வேண்டும். இந்த உணர்வை அல்லாஹ் தன் அருளால் ஜமாஅத்தில் அதிகமாக உருவாக்கியுள்ளான்; அல்லாஹ் அதை மேலும் அதிகரிக்கச் செய்வானாக!

கலந்துகொண்ட அனைவரும் இங்கு நினைவில் கொள்ள வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அதே வேளையில் பணியாற்றிய பணியாளர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டும். பணியாளர்களின் பணிகளில் அல்லாஹ் எளிமையை ஏற்படுத்தியதற்கும், அவர்களின் சிரமங்களை நீக்கி அவர்களின் ஒவ்வொரு பணியிலும் முன்னேற்றத்தை வழங்கி, மிக அதிகமான மக்களுக்கு தொண்டாற்றக்கூடிய வாய்ப்பளித்ததற்கும் நன்றி கூறுங்கள். இவ்வாறு, கலந்து கொண்டவர்களுக்கு அதிக வசதிகள், சிறந்த ஏற்பாடுகள் கிடைத்தன.

இந்த ஆண்டு அல்லாஹ்வின் அருளால் 50,000 பேர் வருகை தந்திருந்தனர். எனவே, இந்த ஐம்பதாயிரம் பங்கேற்பாளர்களும், பணியாளர்கள் மூலம் அல்லாஹ் தங்களுக்கு போக்குவரத்து, உணவு மற்றும் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்பதில் எந்த சிரமமும் ஏற்படாதவாறு வசதிகளை ஏற்படுத்தியதற்கும், அவர்களின் மற்ற பல்வேறு தேவைகளும் பூர்த்தியானதற்கும் நன்றி செலுத்த வேண்டும்.

இந்த எல்லாப் பணிகளும் அல்லாஹ்வின் அருளால் நடந்தன; இதில் நம்முடைய திறமை எதுவும் கிடையாது! மாறாக இது அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் தங்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்காகவும், தங்களின் பணிகளுக்கு சிறந்த விளைவுகளைத் தந்ததற்காகவும் இதில் பணியாற்றியவர்கள் நன்றி செலுத்துகின்ற அதேவேளையில், அல்லாஹ் தங்களுக்காக ஏற்பாடுகளை செய்ததற்காக பங்கேற்பாளர்களும் நன்றி செலுத்த வேண்டும். பல்வேறு மட்டத்தைச் சேர்ந்த, பல்வேறு கல்வித் தரங்களைக்கொண்ட எண்ணற்ற மக்கள் இரவு பகலாக அல்லாஹ்வின் திருப்திக்காக தன்னார்வத் தொண்டு செய்து தங்கள் கடமைகளை நிறைவேற்றினர் என்று அவர்கள் நன்றி தெரிவிக்க வேண்டும்.

அதேபோல். கனடா மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் குத்தாம் பெருமளவில் வந்திருந்தனர்; அவர்கள் மாநாட்டிற்கு முன்பும் மாநாட்டுப் பணிகளில் உதவி செய்தார்கள்; மாநாட்டின் போதும் மாநாட்டுப் பணிகளில் உதவி செய்தார்கள்; மாநாட்டிற்குப் பிறகும் அப்புறப்படுத்தும் பணிகளில் உதவி செய்கிறார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக.

ஒரு ஹதீஸ் குத்ஸியில் வருகிறது; அல்லாஹ் தன் அடியார்களிடம், என் இன்ன அடியான் உங்கள் மீது ஓர் உபகாரம் செய்தான்; ஆனால் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தவில்லையே என்று கேட்பான். அதற்கு அடியான், அல்லாஹ்வே! நீதான் என் மீது

பேரருள் புரிந்தாய்; நான் உனக்கு நன்றி செலுத்தினேன்; செலுத்திக் கொண்டிருக்கிறேன் என்று கூறுவான். அதற்கு அல்லாஹ், இல்லை! நான் அந்த அடியான் மூலமாகவே உன் மீது பேரருள் புரிந்தேன்; உன் காரியங்கள் நடந்தன. எனவே, அந்த அடியானுக்கு நன்றி செலுத்துவதும் அவசியம் என்று கூறுவான்.

அல்லாஹ்வின் அடியார்களுக்கு நன்றி செலுத்துபவர்களாக ஆக வேண்டும் என்றுதான் நம்மிடமும் அவன் விரும்புகிறான். அப்போதுதான் முழுமையாக நன்றி செலுத்தும் ஒரு சூழல் உருவாகும். அதில் எல்லா புறமிருந்தும் நன்றி செலுத்தப்படும். இந்த விஷயத்தை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

இங்கு வந்த விருந்தினர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்களிலிருந்து எனக்குக் கிடைத்தவற்றில், பலர், நாங்கள் பல்வேறு பணியாளர்களிடம் நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்று கேட்டோம். அவர்கள் வேலை செய்யும் விதத்தைப் பார்த்து அவர்கள் ஒருவேளை கூலித் தொழிலாளிகளாக இருக்கலாம் என்று நினைத்தோம். ஒருவர், தான் ஒரு நிறுவனத்தில் அதிகாரி என்று கூறினார்; ஒருவர், தான் கற்பிப்பதாகக் கூறினார்; ஒருவர், தான் பி.எச்.டி மாணவர் என்றார்; ஒருவர், பி.எச்.டி பட்டம் பெற்றவர். ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காகவும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் தங்களை முன்னிறுத்தும் இத்தகைய உணர்வு கொண்டவர்கள் இருக்கிறார்கள்.

இங்கு அந்நியர்களும் வருகிறார்கள். ஜமாஅத்தைப் பற்றி ஆரம்பகட்ட அறிமுகம் மட்டுமே உள்ளவர்களும் பல்வேறு நாடுகளிலிருந்து வருகிறார்கள். (அஹ்மதிகளாகிய) இம்மக்கள், சொல்வது போல் உண்மையிலேயே இருக்கிறார்களா என்று அவர்கள் பார்க்கவும் வருகிறார்கள். வெவ்வேறு தொழில்களை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பணியாளர்கள் இப்படி வேலை செய்வதையும், ஒவ்வொருவரும் ஒரு சாதாரண தொழிலாளியின் வேலையைச் செய்வதையும் பார்க்கும்போது, அது அவர்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது ஒரு மௌனமான தப்லீக் ஆகும்; இவ்விஷயத்தை அவர்கள் வெளிப்படுத்தவும் செய்கிறார்கள்.

இதேபோல், புதிதாக வருபவர்கள், அதாவது ஜமாஅத்தில் இணைபவர்கள் அல்லது முதல் முறையாக இங்கு வருபவர்களும் ஊக்கமடைகிறார்கள். மரியாதையுடனும், கண்ணியத்துடனும் தங்களுக்கு எப்படி விருந்தோம்பல் செய்யப்படுகிறது என்பதையும், இங்குள்ள மக்கள் எப்படி தங்களுடன் பழகுகிறார்கள் என்பதையும் அவர்கள் பார்க்கிறார்கள். ஆக, இது மிகவும் முக்கியமான விஷயமாகும்; இதற்காக நாம் அனைவரும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

*இந்த பின்னணியில், ஹுஸூர் அவர்கள், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஜமாஅத் அல்லாத விருந்தினர்கள் மற்றும் புதிதாக பைஅத் செய்த சிலர் ஆண்டு மாநாட்டில் கலந்துகொண்டதைக் குறிப்பிட்டார்கள். மேலும், அல்லாஹ்வின் அருளால் மாநாட்டின் அருள்களின் விளைவாக அவர்கள் மீது ஏற்பட்ட நல்ல தாக்கங்களைக் குறிப்பிட்டவாறு ஈமானுக்கு எழுச்சியூட்டும் பல சம்பவங்களை எடுத்துரைத்தார்கள்.*

**ரோட்ரிக் அயர்லாந்தின் காவல்துறை உதவி ஆணையர் கூறுகிறார்:** "மாநாட்டின் நாட்களில் நான் கண்டது உண்மையிலேயே ஒரு முன்மாதிரியான விஷயமாக இருந்தது. ஒருங்கமைப்பு மற்றும் ஒழுங்கமைப்பின் ஒரு விலைமதிப்பற்ற பாடம் அது. பத்தாயிரம் தன்னார்வலர்களின் இருப்பு ஒரு வினோதமான அற்புதம் ஆகும். ஒவ்வொருவரும் இணையற்ற அர்ப்பணிப்புடன் தோளோடு தோள் சேர்த்து தொண்டாற்றினார்கள்."

**பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒரு விருந்தினர் - இவர் மனித உரிமை அமைப்பான** HRWF **-ன் பிரதிநிதி ஆவார் - இவர் கூறுகிறார்:** "இவ்வளவு பெரிய அளவில் ஆயிரக்கணக்கான மக்கள் பல நாட்கள் பங்கேற்ற ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்வது நிச்சயமாக ஓர் அசாதாரண வெற்றியாகும். நிர்வாகத் திறமை மட்டுமின்றி அதன் பின்னால் இருந்த நல்லொழுக்கமும் என்னைக் கவர்ந்தது."

**பல்கேரியாவிலிருந்து வந்த புதிதாக பைஅத் செய்த பெண்மணி ஒருவர் கூறுகிறார்:** "இந்த அருள் நிறைந்த நாட்களில் நான் ஓர் இணையற்ற ஆன்மிக சூழலை உணர்ந்தேன்; அதன் ஓர் அங்கமாக மாறும் வாய்ப்பைப் பெற்றேன். எனது அனுபவம் மிகவும் அற்புதமானதாக இருந்தது. விருந்தினர்களின் வசதி மற்றும் ஓய்வுக்காக எவ்வளவு நுணுக்கமாக கவனம் செலுத்தப்பட்டது என்பது மிகவும் ஈர்ப்புடையதாக இருந்தது."

**ஜார்ஜியாவைச் சேர்ந்த ஒரு விருந்தினர் கூறுகிறார்:** "மாநாட்டின் அமைதியான சூழல், சொற்பொழிவுகள் மற்றும் கலீஃபாவின் பேருரைகள் ஆகியவை ஆன்மிகத்தில் முன்னேற ஒரு பெரும் பங்களிப்பைச் செய்கின்றன."

**சுவீடனிலிருந்து வந்த அரபு பெண்மணி ஒருவர் கூறுகிறார்:** "ஆண்டு மாநாடு ஒரு பரந்த வீட்டைப் போன்றது. அது முழு குடும்பத்தையும் தனக்குள் அடக்கிக் கொள்கிறது."

*ஈமானுக்கு எழுச்சியூட்டும் பல்வேறு தாக்கங்களை எடுத்துரைத்த பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* கலந்துகொண்ட அனைத்து விருந்தினர்களின் உள்ளங்களை அல்லாஹ் மேலும் திறப்பானாக! அவர்கள் அஹ்மதிய்யத்தையும் உண்மையான இஸ்லாத்தையும் புரிந்துகொள்பவர்களாகவும், காலத்தின் இமாமை ஏற்றுக்கொள்பவர்களாகவும் ஆவார்களாக! புதிதாக பைஅத் செய்தவர்களையும் ஈமானிலும் கலப்பற்ற தன்மையிலும் வளர்ச்சியடையச் செய்து கொண்டிருப்பானாக. அதேபோல், ஒவ்வோர் அஹ்மதிக்கும், மாநாட்டில் அவர்கள் கண்ட, கேட்ட நிகழ்ச்சிகளின்படி செயல்படுபவர்களாகவும், அதை தங்கள் வாழ்வின் அங்கமாக ஆக்கிக்கொள்பவர்களாகவும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாகவும் ஆக நல்வாய்ப்பளிப்பானாக! இந்த உணர்வு எப்போதும் நிலைத்திருக்கட்டுமாக! மாநாட்டின் அருள்களிலிருந்து ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் பங்கு பெறுபவராக இருப்பாராக. மேலும், தங்கள் நஃப்ஸையும் தங்கள் சூழலையும் சீர்திருத்துவதற்காக முழுமையாக முயற்சி செய்பவர்களாகவும் ஆவார்களாக!

*ஹுஸூர் அவர்கள் Press & Media போன்றவற்றின் அறிக்கையையும் சுருக்கமாகக் கூறினார்கள்:*

ஜமாஅத்தின் Press & Media மற்றும் அதன் கீழ் சுமார் 49 இணையதளங்கள் உள்ளன. அச்சு ஊடகங்கள் மற்றும் செய்தித்தாள்களில் 17 கட்டுரைகளும், வானொலியில் 25 நிகழ்ச்சிகளும், தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாக அல்லாஹ்வின் அருளால் இந்த செய்தி 100 மில்லியன் மக்களைச் சென்றடைந்துள்ளது. MTA ஆப்பிரிக்காவின் பல்வேறு சேனல்களில் ஆண்டு மாநாட்டின் ஒளிபரப்புகளைப் பார்த்த பிறகு 50 -க்கும் மேற்பட்ட அன்பர்கள் பைஅத் செய்தார்கள். ஆண்டு மாநாட்டின் 304 மணி நேர ஒளிபரப்புகள் 22 தேசிய மற்றும் பிராந்திய தொலைக்காட்சி சேனல்களில் செய்யப்பட்டன. இதன் மூலம் 65 மில்லியன் மக்களைச் செய்தி சென்றடைந்துள்ளது. மாநாட்டைப் பற்றி வானொலி நிலையங்களில் 91 அறிக்கைகள் ஒலிபரப்பப்பட்டன. இதன் மூலம் 16 மில்லியன் வரை செய்தி சென்றடைந்துள்ளது. ஊடக நிறுவனங்கள் மற்றும் இதர ஊடகங்கள் மூலம் 47 செய்திகள் ஒளிபரப்பப்பட்டன. இதன் மூலம் 150 மில்லியன் மக்களைச் செய்தி சென்றடைந்துள்ளது.

***இறுதியாக ஹுஸூர் அவர்கள், பாலஸ்தீனத்திலுள்ள காஸாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துல் கரீம் ஜமால் ஜோதா சாஹிப் ஷஹீத் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைக்கப்படும் என்று அறிவித்தார்கள். மேலும், மர்ஹூமுடைய பாவமன்னிப்புக்காகவும் அந்தஸ்து உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.***

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ

وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْیِ

يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)